# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 179/ந/2017

ஆணை எண். 297/2017

நாள் : 26/12/2017

திரு J. சீனிவாசன்,
வீரப்பன் சத்திரம்,
ஈரோடு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி. – எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், வீரப்பன் சத்திரம், எண்.243/63, முனிசிபல் காலனி முகவரியில் வசிக்கும் திரு J. சீனிவாசன் அவர்களது முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.09.2017 அன்று பெறப்பட்டு 179/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு மீது பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

ஈரோடு மாவட்டம், வீரப்பன் சத்திரம், எண்.243/63, முனிசிபல் காலனி முகவரியில் வசிக்கும் திரு J. சீனிவாசன் என்பவர் தற்காலிக பணிநீக்கத்தில் உள்ள தன்னை மீண்டும் பணியில் சேர்க்கவும், தற்காலிக பணிநீக்கக் காலத்திற்கான பிழைப்பூதியத் தொகையினை உடன் வழங்கக் கோரியும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரர் பொள்ளாச்சி நகராட்சியில் 10.02.2000 அன்று வருவாய் உதவியாளராகப் பணியில் சேர்ந்துள்ளார். பணியில் சேர்ந்த நான்கு ஆண்டுகளிலேயே, வரி வசூல் செய்த தொகையினை கையாடல் செய்தமைக்காக 12.02.2004 அன்று தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். முறையீட்டு மனுதாரர் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ள நிலையில், திருட்டு வழக்கு ஒன்றில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு, கோபிசெட்டிபாளையம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் 5 மாத சிறைத்தண்டனை வழங்கி உத்திரவிட்டுள்ளார். சிறைத்தண்டனையைப் பெற்று மீண்ட முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குறித்த நேர்வு நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிசீலனையில் உள்ளதாகத் தெரிகிறது. 01.12.2004 முதல் 30.09.2008 முடிய உள்ள காலத்திற்கான நிலுவை பிழைப்பூதியம் மற்றும் அதற்குப் பின்பு உள்ள காலத்திற்கும் பிழைப்பூதியம் வழங்க வேண்டி மனுதாரர் முறையாக விண்ணப்பிக்கவில்லை என பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். நிலுவை வருடங்களுக்கான பிழைப்பூதியம் நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்றே வழங்கவேண்டும் என உள்ளாட்சி நிதிக்கணக்கு உதவி இயக்குநர் தெரிவித்துள்ள நிலையில், மனுதாரர் முறையாக பொள்ளாச்சி நகராட்சி ஆணையருக்கு உரிய முறையில் முறையீடு செய்து கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

டி. பழனிவேல்
செயலாளருக்காக
27/12/17

பெறுநர்

1. திரு J. சீனிவாசன்,
243/63, முனிசிபல் காலனி,
வீரப்பன் சத்திரம் – 638 004.

2. நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி,
பொள்ளாச்சி – 642 001.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்